

"காலத்தை மறப்பதற்கான இயக்கமே ஐக்கியப்படுத்துதல்"


வசந்த இதழ்
Vasanta Ethal
KRISHNAMURTI FOUNDATION INDIA OCTOBER 2011 - JANUARY 2012 Rs.2/- VOL VI ISSUE 3


# ஒரு புதிய தலைமுறையினரை உருவாக்க நாம் தயாரா?

***கேள்வி : இளைய சமுதாயத்தினருக்கான கல்வியில், வரலாற்றின் முக்கியத்துவம் என்ன ?***

ஒருவர் வரலாற்றை படித்திருப்பாரேயானால், மனிதன் இயற்கைக்கு எதிராக போராடி, அதனை வெற்றி கண்டும், அழித்தும், மாசுபடுத்தியும் உள்ளான் என்பது அவருக்கு தெளிவாகத் தெரியும். மனிதன், மனிதனுக்கு எதிராகப் போராடியுள்ளான்; எப்போதும் போர்கள் நடைபெற்று வந்துள்ளன. மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடுகிறான்; இருந்தபோதிலும், அவன் நிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் அடிமையாகிறான்; அதன் பின்னர், அவைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயல்கிறான்; அம்முயற்சி, வேறு பல நிறுவனங்களையும், அமைப்புகளையும், நிறுவுவதற்கே என்றாகிவிடுகிறது. சுதந்திரமாக வாழ்வதற்கானப் போராட்டம் என்றென்றும் தொடர்ந்தவண்ணம் உள்ளது. இனச் சண்டைகள், நிலப் பிரபுத்துவ சண்டைகள், ஒரு நாடு, மற்றொரு நாட்டை தன் ஆளுகையின் கீழ் கொண்டு வருவதற்கான காலனி ஆதிக்கச் சண்டைகள், அரசர்கள் மற்றும் நாடுகளுக்கிடையேயான போர்கள் ஆகியவற்றை கொண்டதுதான் மனித இனத்தின் வரலாறு. இந்த போர் பூசல்கள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஒரு இனக் குழுவைச் சார்ந்த மன இயல்பு, புதிய பாணியில், ஒரு நாட்டினத்தைச் சார்ந்த மன இயல்பாக மாறியுள்ளது. ஆனாலும், மன இயல்பு ஒரு இனக் குழுவைச் சார்ந்த மன இயல்பாகவே தான் இன்னமும் உள்ளது. மனித இனத்தின் வரலாறானது, அதன் பண்பாட்டை உள்ளடக்கியது ஆகும். எண்ணிலடங்கா துயர்களை அனுபவித்த, பல்வேறு நோய்களால் துன்பப்பட்ட, போர்களால் அவதியுற்ற, மத நம்பிக்கைகள், கோட்பாடுகளின் காரணமாகவும் கடவுள், அமைதி, இலட்சியம் ஆகியவகைகளின் பெயராலும் சித்திரவதைகளையும் கொடுமைகளையும் விசாரணைகளையும் அனுபவித்த மனிதனின் கதையாக மானுட வரலாறு இருக்கிறது.

இந்த வரலாற்று உண்மைகளை எல்லாம் இளைய சமுதாயத்தினருக்கு எவ்வாறு போதிப்பது?

☞ 2

# செவ்விய கல்வி முறை

படிப்பறிவு இல்லாதவர் அறிவிலி என்பதில்லை. எவர் தன்னை அறியாதவரோ, அவர்தான் அறிவிலி. தன்னைப் புரிந்து கொள்வதற்காக நூல்களையும் தகவல் அறிவையும் அதிகாரத்தையும் சார்ந்திருக்கும் படிப்பாளி, அறிவிலியே. தன்னறிவின் மூலமாக மட்டுமே புரிதல் நிகழ்கிறது. தன்னறிவு என்பது தன்னுடைய உளரீதியான செயல்பாடுகள் அனைத்தையும் விழிப்புடன் அறிந்துக்கொள்வதாகும். எனவே கல்வி என்பது, அதன் உண்மையான அர்த்தத்தில், ஒருவன் தன்னை அறிதலாகும். நம் ஒவ்வொருவருள்ளும் மானுட இருத்தலின் முழுமை சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

நாம் புத்தகங்களிலிருந்து தகவலைப் பெறுவதையே கல்வி என அழைக்கிறோம். இதை படிக்கத் தெரிந்தவர் எவராலும் செய்துவிட முடியும். இப்படிப்பட்ட கல்வி, பிரச்சினைகளிலிருந்து நாம் தப்பித்துச் செல்வதற்கு உகந்த, பொருத்தமான வழியைத் தருகிறது. இதுவும் மற்ற தப்பித்தல் வழிகளைப் போன்றே துயரம் விளைவிப்பதைத் தவிர்க்க முடியாததாகிறது. மக்கள், பொருட்கள், கருத்துக்கள் ஆகியவற்றுடன் நாம் கொண்டுள்ள தவறான உறவினால்தான் சச்சரவும்

☞ 3

மனிதனின் கதையாக இருக்கும் மானுட வரலாறானது, வெறும் போர்கள், அரசர்கள் பற்றிய கதை யாக இல்லாமல், அது கற்பவர் மற்றும் கற்பிப்பவரின் கதையாகவும் உள்ளது.

கடந்த காலத்தின் கதையாக வும் அதன் விளைவாகவும் உள்ள மாணவனின் கதையை, அவன் புரிந்துகொள்ள ஆசிரியர் எவ்வாறு உதவலாம் ?

என்னுடைய மூளையானது, பல இலட்சக்கணக்கான ஆண்டு களின் விளைவாக இருப்பதால் 'என்னைப் பற்றி' என்றால், அதில் மானுடம் முழுமையும் அடங்கும். வன்முறை, போட்டி, முரட்டுத்தனம், காட்டுமிராண்டித்தனம், கொடூரத் தன்மை, பயம், களிப்பு, எப்போ தாவது ஏற்படும் ஆனந்தம் மற்றும் லேசாக வீசும் அன்பின் மணம், - இவைகள் எல்லாம் என்னிடத்தில் உள்ளன. இவற்றையெல்லாம் புரிந்து கொள்வதற்கு நீங்கள் எனக்கு எவ்வாறு உதவுவீர்கள்? அதன் பொருள் என்னவென்றால், ஆசிரியர், தன்னைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், அவர், மாணவனாகிய நான், என்னைப் புரிந்து கொள்வதற்கு உதவ முடியும். ஆகவே, அது ஆசிரியருக்கும், எனக்கும் இடையே ஏற்படும் தொடர்பு பரிமாற்றம் ஆகும்; பரிமாற்ற நிகழ்வில், அவர் தன்னைப் பற்றி புரிந்து கொள்கிறார்; என்னைப் புரிந்து கொள்வதற்கும் அவர் எனக்கு உதவுகிறார். ஆசிரியர் முதலில் தன்னைப் புரிந்து கொண்ட பிறகு, போதிக்க வேண்டும் என்பது இல்லை. தன்னைப் புரிந்துக் கொள்ள, ஒருவேளை, எஞ்சிய வாழ் நாள் முழுவதுமே தேவைப்படலாம். ஆனால் கல்வி கற்பிப்பவர் மற்றும் கல்வி பெறும் நபருக்கிடையில் உள்ள உறவில் அங்கு பரஸ்பர விசாரணை நடைபெறுகிறது. இதனை, சிறு குழந்தையிடமோ அல்லது இளம் மாணவனிடமோ செய்ய முடியுமா? எவ்வகையில் நீங்கள் அதனை தொடங்குவீர்கள்? அதுதான் கேள்வி.

பெற்றோர் என்ற முறையில், நீங்கள் இந்தப் பிரச்சனையை எவ்வாறு அணுகுவீர்கள் ?

மனதினுடைய முழுமையான தன்மை மற்றும் அமைப்பினையும், வாழ்வின் மொத்த இயக்கமாக இருக்கும் ஆசைகள் மற்றும் பயங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்வதற்கு, நீங்கள் எவ்வாறு உங்கள் குழந்தைக்கு உதவுவீர்கள் ? அது ஒரு பெரிய பிரச்சினை.

### *'நல்லது' என்பது ஒரு இலட்சியம் இல்லை*

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர் கள் என்ற முறையில் ஒரு புதிய தலைமுறையினரை உருவாக்கு வதற்கு நாம் தயாரா? முற்றிலும் மாறுபட்ட மனதையும் இதயத்தை யும் கொண்ட ஒரு புதிய தலை முறையினரை உருவாக்க நாம் தயாரா? நீங்கள் பெற்றோராக இருக்கும் பட்சத்தில் உங்கள் குழந்தையின் நலத்திற்காக மது பானம் அருந்துதலையோ, புகை பிடிப்பதையோ, போதைப் பொருள் பயன்படுத்தும் கலாச்சாரத்தையோ கைவிட்டுவிட்டு நீங்களும், உங்கள் குழந்தையும் நல்ல மனிதர்களாக வாழ முயற்சி எடுப்பீர்களா ?

'நல்லது' என்ற சொல்லுக்குப் பொருள் சரியாகப் பொருந்துதல் என்பதாகும். உளவியல் ரீதியாக எவ்வித முரண்பாடும் இல்லாமல், சரியாக மூடும் கதவைப் போன்றும் சீராக ஓடும் மோட்டாரைப் போன்றும் உள்ளதை 'நல்லது' எனலாம். மேலும் 'நல்லது' என்ப தற்கு முழுமையானது, பிளவு படாதது, சிதறாதது என்றும் பொருளாகும்.

ஆகவே, கல்வியின் மூலமாக அண்டை வீட்டுக்காரனுக்குப் பயப் படாத, எதிர் காலத்தைக் குறித்து அச்சம் கொள்ளாத, நோய், மற்றும் வறுமை போன்ற பலவற்றைக் குறித்து பயப்படாத ஒரு நல்ல மனிதனை உருவாக்க நாம் தயாராக உள்ளோமா? மேலும், குழந்தையும், நாமும் சீரிய நேர்மை உணர்வு பெற விழைகிறோமா ? சீரிய நேர்மை (integrity) என்பது முழுமை என்றாகும். சொல்லும் செயலும் ஒன்றாகி இருப்பதே சீரிய நேர்மை ஆகும். நாம், மாயத்தோற்றங்களையும், கற் பனையான கருத்துக்களையும், ஊகத்தின் அடிப்படையில் அமைந்த இலட்சியங்களையும் தீவிர நம்பிக்கை களையும் கொண்டிருந்தோமானால், நம்மால் நேர்மையாக இருக்க முடியுமா?

நாம் கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கைக்கு உண்மையாக நாம் இருக்கலாம். ஆனால் அது சீரிய நேர்மை உணர்வை குறிக்காது. தற்போது உள்ளபடி, குழந்தை களைப் பெற்று இரண்டு அல்லது மூன்று வயது வரையில் அவர்க ளுக்கு அதிக செல்லம் கொடுத்து, கெடுத்து, பின்னர் அவர்களை போருக்குத் தயார் செய்கிறோம். வரலாறு மனித இனத்திற்குப் பாடம் புகட்டவில்லை; எத்தனையோ தாய்மார்கள் தம் பிள்ளைகள் போர் களில் கொல்லப்பட்டதையறிந்து கண்ணீர் வடித்திருக்க வேண்டும்; இருப்பினும், நாம் ஒருவரையொரு வர் கொல்லும் இந்த பயங்கர போரை நிறுத்த வல்லமையின்றி உள்ளோம்.

இளைய சமுதாயத்தினருக்கு கல்வி புகட்ட, நாம் நல்லதைப் பெற வேண்டுமென்ற கோரிக்கை யுணர்வை நம்முள் கொண்டிருக்க வேண்டும். 'நல்லது' என்பது ஒரு இலட்சியம் இல்லை; அது, முழுமை யாகவும், நேர்மையாகவும், அச்ச மின்றியும், குழப்பமின்றியும் இருப்ப தாகும். இவைகள் எல்லாம் இலட்சியங்கள் இல்லை; உண்மை களே ஆகும். இத்தகைய பண்பு களை நாம் பெறுவது சாத்தியமா? சாத்தியமெனில் அப்போது நாம் கல்வியின் மூலம் நல்ல மனிதர் களை உருவாக்க முடியுமா? நாம் ஒரு மாறுபட்ட பண்பாடு வேண்டும் என்று உண்மையிலேயே விழைகி றோமா? - குழப்பமற்ற, அச்சமற்ற, நேர்மை உணர்வுடன் கூடிய மனதைக் கொண்ட ஒரு வித்தியாச மான மனிதன் உருவாக வேண்டும் என்று நாம் உண்மையிலேயே விழைகிறோமா?

Questions & Answers
Chapter 6.

குழப்பமும் வருகின்றன. நாம் உறவை சரியாகப் புரிந்து கொண்டு மாற்றாதவரை, வெறும் படிப்பும், தகவல்களைச் சேகரிப்பதும், பல் வேறு திறன்களை பெற்றிருப்பதும் மேலும் குழப்பத்திற்கும் அழிதலுக் குமே கொண்டுச் செல்லும்.

இன்றைய சமுதாய அமைப்பில், நாம் குழந்தைகளை, கல்வி கற்க பள்ளிக்கு அனுப்பி வைக்கிறோம். படிப்பு முடிந்தவுடன் தன் பிழைப்புக்கான ஏதோ ஒரு தொழில் நுணுக்கத்தை அவன் கற்று விடுவான் என்பதற்காகத்தான் பள்ளிக்கு அனுப்புகிறோம். கல்வி அவனுக்கு பாதுகாப்பான பொருளா தார நிலையை அளித்து விடும் என்ற நம்பிக்கையோடு, குழந்தைக்கு தொழிற் கல்வியை அளித்து மிகச் சிறந்த திறமைசாலியாக ஆக்கவே பெரிதும் வேண்டுகிறோம். ஆனால் தொழில் நுட்பத்தை கற்றுக் கொள்வது நம்மை நாமே புரிந்து கொள்ளும்படிச் செய்ய உதவுமா என்ன?

எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்வது தேவை என்பது தெளிவாகத்தான் இருக்கிறது. பொறியியல் அல்லது ஏதோவொரு தொழில் கல்வி கற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆனால் இத்திறமை வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற் கான திறனை அளிக்குமா என்ன? நிச்சயம், செயல்திறமை என்பது இரண்டாம் நிலையானதுதான்; உத்தி (technique) ஒன்றை அடை வதற்கு மட்டுமே நாம் முயற்சிக்கி றோமெனில், வாழ்க்கையின் மிகப் பெரிய பாகமாக இருக்கும் தன்னை யறிதலை நாம் பெறவில்லை. அதை உதாசீனப்படுத்துகிறோம் என்பது வெளிப்படை.

வாழ்க்கை என்பது, துன்பம், மகிழ்ச்சி, அழகு, விகாரம், அன்பு, போன்றவற்றைக் கொண்டது. நாம் வாழ்க்கையை முழுமையாகப் புரிந்து கொண்டால், அப்போது ஒவ்வொரு கட்டத்திலும், புரிதலானது, அதற்கே யுரிய உத்தியை தோற்றுவிக்கிறது. ஆனால், உத்தியானது ஆக்கப் பூர்வமானப் புரிதலை ஒருபோதும் கொண்டு வராது.

இன்றைய கல்வியானது ஒரு முழு தோல்வியே. இன்றைய கல்வியில் வழிமுறைகள், உத்திகள் மிகையாக வற்புறுத்தப்படுவதால், இயல்பான செயல்பாடு அழிந்து விட்டது. வாழ்க்கையை புரிந்துக் கொள்ளாமல் திறமையையும் ஆற்றலையும் மட்டுமே வளர்த்துக் கொள்வதாலும், சிந்தனை மற்றும் ஆசைகளின் செயல்பாட்டினைப் பற்றிய முழுமையான பார்வை இல்லாததினாலும், நாம் மேலும் மேலும் ஈவு இரக்கமற்றவர்களாக ஆக்கப்பட்டோம். போர் மூளுவதற் கானக் காரணமாகவும் நம் பாது காப்பிற்கு ஆபத்தாகவும் அது அமைந்தது. மற்றதையெல்லாம் விலக்கிவிட்டு உத்தியை மட்டுமே வளர்த்ததினால் விஞ்ஞானிகள், கணித மேதைகள், பாலம் கட்டும் பொறியாளர்கள், விண்வெளி வெற்றி வீரர்கள் போன்றோர் உருவாகி வெளிவந்தனர். ஆனால் இவர்கள், வாழ்வின் முழுமையைப் புரிந்து கொண்டார்களா என்ன? குறிப்பிட்ட ஒரு துறையில் தலைசிறந்த நிபுண ராக இருப்பவர் வாழ்க்கையை முழுமையாக அனுபவித்திருக் கிறாரா? நிபுணராக இல்லாதபோது மட்டுமே அந்த அனுபவம் ஏற்படும்.

தொழில்நுட்ப முன்னேற்றம் ஏதோ சில நபர்களுக்கு ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட வகையான பிரச்சினைகளைத் தீர்த்தது. ஆனால், அது, ஆழமான மற்றும் பரவலான பிரச்சினைகளை புதிதாக கொண்டு வருகிறது. வாழ்க்கையின் முழுப் பரிமாணத்தை புறக்கணித்துவிட்டு ஒரு கட்டத்தில் மட்டுமே வாழ்வது என்பது, பெருந்துயரத்தையும் அழிவையும் வேண்டி அழைப்ப தாகும். எனவே ஒவ்வொரு தனி மனிதனுக்குமுள்ள மிகப்பெரிய பிரச்சினை என்னவெனில் அதிகரித் துக்கொண்டே போகும் வாழ்க்கை யின் சிக்கல்களைச் சந்திக்க உதவும் வாழ்க்கையைப் பற்றிய முழுமை யான புரிதலை எவ்வாறு கொண்டி ருப்பது என்பதைப் பற்றியதுதான்.

தொழில்நுட்ப அறிவு எவ்வளவு தான் இன்றியமையாததாக இருப்பி னும், அது நமது மன அபத்தங் களுக்கும் மனப் போராட்டங்களுக் கும் தீர்வு காணாது; நாம் வாழ்வை முழு இயக்கமாகப் புரிந்து கொள்ளாமல் தொழில்நுட்ப அறிவு மட்டுமே பெற்றதால், அதுவே, நம்மை அழிக்கும் சாதனமாக மாறி விட்டது. அணுவைப் பிளக்க தெரிந்து கொண்ட மனிதன், இதயத்தில் அன்பு இல்லாமல் போனால் அவன் அரக்கனாகி விடுவான்.

***கல்வியும் வாழ்க்கையின் மகத்துவமும், அத்தியாயம் 2.***

# சீரழிவிற்குக் காரணமாயிருக்கும் கல்விமுறை

**எ**ன்ன விசித்திரமான உலகம் இது! உங்கள் குழந்தைகளின் நலனில் அக்கறையில்லாத ஒருவரிடம் உங்கள் குழந்தைகளை ஒப்படைக் கிறீர்கள். அவர்கள் நலனில் உங்களுக்கும் அக்கறையில்லை. ஆகவே, குழந்தைகள் பயத்துடன் தனிமையிலும், கலக்கத்திலும் வளர் கிறார்கள். அவர்களுக்கு வீட்டிலும் அன்பு கிடைப்பதில்லை, பள்ளி யிலும் அன்பு இல்லை. தயவு செய்து உங்கள் பொறுப்பை நினைத்துப் பாருங்கள்.

சமுதாய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாய் இருப்பவைகளில் ஒன்றாக கல்வி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. கல்வி என்று எது அழைக்கப்படுகிறது? உங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு ஏன் அனுப்புகிறீர்கள்? தொழில்நுட்ப அறிவைப் பெற்று, அதன் மூலம் நல்ல வருமானம் தரும் பணியில் அவர்கள் அமர்வதற்காகவா அனுப்பு கிறீர்கள்? சில தேர்வுகளில் தேறி, எழுத்தர் வேலையில் சேர்ந்து, பதவி உயர்வு எனும் ஏணிப்படிகளில் ஏறி மேலாளர் பதவிக்கு உயர உதவு வதையா கல்வி என்கிறோம்?

மந்தபுத்தியுள்ள, மென்னு ணர்ச்சியற்ற, மூடநம்பிக்கைகள்

கொண்ட, பணம் சம்பாதிப்பதில் மட்டும் கெட்டிக்காரர்களான நம்மைப் போன்றே, வரும் தலைமுறையையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தங்கள் பிள்ளைகள் பட்டப்படிப்பில் தேறி, நல்ல வேலையில் அமர்ந்து, மணம் புரிந்துகொண்டு, வாழ்க்கையில் நிலைபெற வேண்டும் என்பதே பெற்றோர்களின் அக்கறையாக இருக்கிறது. இப்படி நிலைபெறுவது துன்பத்திலல்லவா நிலைபெறுவது!

சமுதாயம், புதிய சிந்தனையாளரை வேண்டுவதில்லை. அது வேண்டுவதெல்லாம் கௌரவமான மனிதர்களையே. ஆகவே, அது மக்களை சமுதாய நெறிகள் என்ற வார்ப்பில் இட்டு அவர்களை வடிவமைக்கிறது. இதனால், இளமையின் கள்ளங்கபடமற்றத் தன்மையும், புத்துணர்ச்சியும் அழிக்கப் படுகிறது. இதன் காரணமாய், மனிதன், சிந்தனை முதிர்ச்சியை என்றுமே அடைவதில்லை.

அனைவருக்கும் உணவு, உடை, உறைவிடம் அளிப்பதற்கான அறிவியல் நம்மிடம் இருந்தும், அது செயல்படுத்தப்படவில்லை. சந்தோஷமாக மனிதன் வாழக்கூடிய உலகத்தை, பட்டம் பெற்ற தலைவர்களால் உருவாக்க முடியவில்லை. ஆக, நவீன கல்விமுறை தோல்வியுற்றது, இல்லையா? தொடர்ந்து இத்தகைய முறையில் கற்பதை நீங்கள் விரும்பினால், மேலும் குழப்பத்தையும், குளறுபடிகளையும் கொண்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

இன்றைய கல்விமுறை, வழிமுறைகளுக்கு அதிக இடம் கொடுத்திருப்பதால், இயல்பான செயல்பாடு அழிக்கப்படுகிறது. வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல், எண்ணங்கள் மற்றும் விருப்பத்தைப் பற்றிய தெளிவு இல்லாமல், ஆற்றலையும், திறனையும் மட்டும் வளர்த்துக் கொள்வதால், இரக்கமற்றத்தன்மை நம்முள் அதிகரிக்கிறது. அதன் காரணமாய், போர்களும், போரின் காரணமாய் பாதுகாப்பற்ற நிலையும் உருவாகிறது.

முற்றிலும் வேறுபட்ட மனமும், இதயமும் கொண்ட புதிய தலைமுறையை உருவாக்க பெற்றோர்களும், ஆசிரியர்களுமான *நாம்* தயாராக இருக்கிறோமா?

ஒருவர் எட்டக்கூடிய உயர்ந்த, முழுமையானத் திறனைப்பற்றி அவருக்கு உணர்த்த உதவுவதில் நம் கவனம் இருக்கிறது. பிறரோடு ஒப்பிட்டுப் பார்ப்பது, முழுமையாகத் திறம் பெறுவதைத் தடுக்கிறது. ஒப்புமை செய்யப்படாதபோது, தோட்டவேலை செய்பவரின் முழுமையானத் திறனும், விஞ்ஞானியின் முழுமையானத் திறனும் ஒன்றே. அனைவரும் முழுமையானத் திறனுடன் விளங்கும்போது, சமத்துவ சமுதாயம் உருவாக்கப்படுகிறது. சீரிய கல்விமுறையில் திறனை ஒப்பிட்டுப்பார்ப்பதும், ஒப்பிடுவதால் தோன்றும் பொறாமையும் இல்லை. ஆகவே, இக்கல்விமுறை, சமத்துவ சமுதாயம் மலர உதவுகிறது.

எவராலும் மதிக்கப்படாதவராய், வெற்றி பெறாதவராய் இருந்துவிடுவோமோ என்ற பயம் தான், போட்டி மனப்பான்மைக்கு காரணமாய் இருக்கிறது. பயம் இருந்தால், கற்றறிய முடியாது. ஆகவே, பயத்தைப் போக்குவதே, கல்வியின் பணியாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். பயத்தை நீக்க, எல்லாவிதமான போட்டிகளையும் முடிவிற்கு கொண்டு வருதல் வேண்டும். போட்டியிடுதல் என்ற செயல்முறை யால், மூளையின் புத்துணர்ச்சி நாளடைவில் மங்கிப்போகிறது.

ஆக, காகிதத்தில் அச்சிடப் பட்டதை மூளைக்கு மாற்றுவதாக மட்டும் கல்வி நின்றுவிடாமல், 'வாழ்க்கையின் பேரியக்கத்தைக் காண அது உதவுவதாக இருக்க முடியும். வெறுப்பு, மற்றும் குழப்பம் இல்லாமல், சுதந்திரமாக, மகிழ்வோடு எவ்வாறு வாழ்வது என்பதைப்பற்றி தெரிவிப்பதாகவும் கல்வி இருக்க முடியும். நவீன கல்விமுறை நம்மை குருடாக்கி, மற்றவருடன் சண்டையிடவும்,

## நிச்சயத்தன்மையுடன் இருக்க வேண்டிய ஆசை

நாம் ஏன் கீழ்படிகிறோம், பின் பற்றுகிறோம், மற்றவர் செய்வது போல் செய்கிறோம்? நாம் நிச்சயத் தன்மையுடன் இருக்க விரும்பு கிறோம். பொருளாதார ரீதியில், ஒழுக்க ரீதியில், நாம் நிச்சயத்துடன் இருக்க விரும்புகிறோம்; நாம் அங்கீகாரம் தேடுகிறோம், பாதுகாப்பான நிலையில் இருக்க விரும்புகிறோம், எவ்வித பிரச்சனையும், வலியும், துன்பமும், நம்மை எதிர் கொள்ளாமல் இருக்க வேண்டுகிறோம்; ஒரு கூட்டிற்குள் அடைந்து கொள்ள விரும்புகிறோம். எனவே மேலோட்டமாகவோ, ஆழ்மனதிலிருந்தோ பயம் நம்மை ஒரு சித்த புருஷர், தலைவர், சமயகுரு, ஆகிய இவர்களிடம் மற்றும் அரசாங்கத்திடம் நம்மை கீழ்படியச் செய்கிறது. தண்டனை காரணமாக மற்றவர்களுக்கு தீங்கு இழைக்கும் செயலை நாம் செய்யாதபடி பயம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. எனவே நம்முடைய எல்லா செயல்கள், பேராசை, தேடல் ஆகிய வற்றின் பின்னணியில் ஒழிந்திருப்பது நிச்சயத்தன்மையுடன் இருக்க வேண்டிய ஆசையே, எனவே பயத்தை தீர்க்காமல், பயத்திலிருந்து விடுபடாமல், கீழ்படிதலோ, கீழ்படிய வைத்தலோ முக்கியத்துவம் அற்றது. பயத்தை அன்றாட புரிந்து கொள்ளுதல், அது பலவிதமாக வெளிப்படுவதை அறிவதே முக்கியமானது. பயத்திலிருந்து விடுதலை உள்ளபோதுதான் உள்மனதில் புரிந்து கொண்ட தன்மையும், அறிவு மற்றும் அனுபவச் சேர்க்கை இல்லாத தன்மையும் மலரும். அத்தகைய உணர்வு மட்டுமே உண்மையைத் தேடும் வேட்கையில் அசாதாரணமான தெளிவை அளிக்கிறது.

Book of Life
March 25

போட்டி போடவும் வைக்கிறது. சீரிய கல்வி, நம் மனதை, கட்டுப்பாடு களிலிருந்து விடுவித்து, அதற்கு சுதந்திரம் அளிக்கும். இத்தகு கல்வியின் விளைவால், அன்பு பரிணமிக்கும், உண்மையான உறவு மலரும்.

எனவே, மாணவன் நமது பிரச்சனை அல்ல. ஆசிரியரும், பெற்றோருமே பிரச்சனையாக உள்ள னர். ஆசிரியருடைய பணி, இயந்திரத் தனமான பணி அல்ல. அழகு, மற்றும் மகிழ்ச்சியின் வெளிப் பாடாக அப்பணி இருக்கிறது. அப்பணியை வெற்றிகளாலும், சாதனைகளாலும் அளவிட முடியாது.

செய்திகளை, தகவல்களை, விஷய ஞானங்களைச் சொல்லிக் கொடுப்பது மட்டும் கற்பித்தல் அல்ல. ஆய்வு செய்யும் மனப் பான்மையை வளர்ப்பது கற்பித்த லின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்பணியைத் தொழில் என்று சொல்வதற்கில்லை - அப்படிச் சொல்ல முடிந்தால், அது மிகவும் மேன்மையானத் தொழில். அது ஒரு கலை. அதற்கு பரந்த அறிவும், புலமையும் இருந்தால் மட்டும் போதாது. எல்லையற்ற பொறுமையும், அன்பும் தேவை. பணம், சொத்து, மக்கள், இயற்கை போன்ற அனைத்துப் பொருட் களிடமும் நாம் கொண்டுள்ள உறவைப் புரிந்துக்கொள்ள உதவு வதுதான் உண்மையானக் கல்வி.

*பெற்றோர்களாகிய எங்களை யும், ஆசிரியர்களையும், வாழ்க்கை யின் முக்கியமான விவகாரங்களைப் பற்றி விவாதிக்க, அவர் அழைத்தார். அவர் கேள்விகளுக்கு எங்களுக்குத் தெரிந்த பதில்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம். தொடர்ந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கானப் பதில்கள் உண்மையிலேயே எங்களுக்குத் தெரியவில்லை. எல்லாம் தெரிந்தவர்களாக நினைத்துக் கொண்டிருக்கும் கால கட்டத்தில், கிருஷ்ணமூர்த்தி எங்களுடைய பேதமையை எங்களுக்கே பரிசாக அளித்து விட்டார். உண்மையைச் சொல்லப் போனால், இவ்விவாதம் மிகவும் கஷ்டப்படுத்துவதாக இருந்தது. அவரிடம் எங்கள் அதிருப்தியை வெளியிட்டோம். எங்கள் பேதமையை வெளிப்படுத்திய அவர் மேல் கோபப்பட்டோம். அவர் கேள்விகளால், புண்பட்டோம். ஆனால், முடிவில் ஏமாற்றமடைய வில்லை. எங்கள் சந்திப்பில், முழு கவனத்தோடு கூடிய ஒருமனப்பட்ட நிலையை கிருஷ்ணமூர்த்தி கொண்டு வந்தார். நிதானமும், தெளிவும் மட்டுமின்றி, விடுதலைப் பெற்றுத்தருவதாகவும் எங்கள் சந்திப்பு அமைந்தது.*

**ஜே. கிருஷ்ணமூர்த்தியும்**
**நெருக்கடியில் தவிக்கும் உலகமும்.**
**பக்கம் 32-35.**

# பிரிவினை, போராட்டத்தை தோற்றுவிக்கும்

மனிதர்களிடையே, இனங்களுக்கு இடையே, பண்பாடுகளுக்கிடையே ஏன் இந்தப் பிரிவினை இருக்கிறது? சமயங்களும் பிரிவினையை உண் டாக்குகிறது. ஒரு சமயத்தவர், மற்ற சமயத்தவருக்கு எதிராகப் போராடு கின்றனர். குறிப்பிட்ட கூட்டத்துடன், குறிப்பிட்ட கொடியுடன், குறிப்பிட்ட மத சடங்குகளுடன் தன்னை அடை யாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நம்முடைய விபரீத ஆசை, பாதுகாப்பாக இருக்கிறோம் என்ற உணர்வை நமக்கு அளிக்கிறது.

உலகம் தேசங்களாய் பிரிக்கப் பட்டதின் மூலம் பாதுகாப்புக்கு வழி யில்லாமல் போய்விட்டது. அயல் நாட்டின் மிரட்டல்கள், வேற்று சித்தாந்தங்களின் எதிர்ப்புகள், போர்கள் என்று புறத்தில் நீங்கள் அவதிக்குள்ளாவதால் பாதுகாப்பு வேண்டும் என்று நீங்களும் அரசியல் வாதிகளும் சொல்கிறீர்கள். நாம் ஒவ் வொருவரும் பாதுகாப்பை, பிரிவினை யின் மூலம் தேடுகிறோம். குடும்பத்தில் நாம் பாதுகாப்பாக இருப்பதாக நினைக்கிறோம்; குடும்பத்திலிருந்து தேசத்தில் பாதுகாப்பாய் இருப்பதாக நினைக்கிறோம் - தேசம் என்பது மதிப்பிற் குரிய தாக்கப்பட்ட ஓர் சிறு கூட்டமே.

ஆக தனித்தன்மை, குடும்பம் போன்ற பல்வேறு பிரிவினைகளில் நாம் பாதுகாப்பைத் தேடுகிறோம். எங்கெல் லாம் பிரிவினை இருக்கிறதோ அங்கெல் லாம் போராட்டம் உள்ளது என்பதை *நம் அன்றாட வாழ்க்கையில்* நம்மால் காண முடியும். இது இயற்கையின் நியதி. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரிவினை இருக்குமேயானால், அவர்களிடையே போராட்டம் *இருக்கும்.* அதனால் தான் விவாகரத்துகள் பெருகி விட்டன. மனோதத்துவ நிபுணர்களின் 'கட்டுப்படுத்தாதீர்கள், என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதைச் செய்யுங்கள்' என்ற அறிவுரையால் மக்கள் உந்தப்பட்டு தங்கள் தங்கள் விருப்பப்படியே நடந்து கொள்கிறார்கள், தங்களை முழுமையாக வெளிப்படுத்த விரும்புகிறார்கள்.

அநீதி, சண்டைகள், வறுமை போன்றவற்றைக் கொண்டிருக்கும் நம் சமுதாய அமைப்பை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற நியாயமான அக்கறையை நாம் கொண்டுள்ளோம். ஆனால், சீர்திருத்தத்தை, வன்முறை மூலமாகவோ அல்லது நிதானமாகச் செயல்படும் சட்டம் இயற்றுதல் மூலமாகவோ கொண்டுவர முயற்சிக்கி றோம். பன்னெடுங்காலமாய் சேகரிக்கப் பட்டு வரும் துக்கம், வன்முறை, வெறுப்பு, சமய வேறுபாடுகள், இன வேறுபாடுகள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தா மல் அலட்சியப்படுத்தி விட்டோம். சமுதாய அமைப்பைப் போலவே இவை களும் நிஜமானதாக, முக்கியமானதாக, சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்த மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெறுப்பு போன்ற சேகரிப்புகளின் மீது கவனம் செலுத்தாமல், வெளிப்புற சமுதாய அமைப்பு சீர்திருத்தங்களில் மிகுந்த கவனம் செலுத்துகிறோம். இவ்வாறு பிரிந்து செயல்படுவதே நமது வீழ்ச்சிக்கு மிகப்பெரிய காரணமாய் இருக்கக்கூடும்.

நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வ தாய் இருக்கும் நம்பிக்கைகளுடனும், ஒரு கூட்டத்துடனும், ஒரு குறிப்பிட்ட கருத்தோடும், ஒரு நாட்டுடனும் நம்மை நாம் அடையாளப் படுத்திக் கொள்ளும் வரை, நமக்கிடையே ஒத்துழைப்பு ஒருபோதும் இருக்காது.

வாழ்க்கையின் அனைத்துத் தடங்களிலும், பாதுகாப்பை, மனிதமூளை நாடுவதின் விளைவாக இந்த குழப்பமும் துன்பமும் ஏற்படுகிறதா? ஒருவருக்கு உடை, உணவு, உறைவிடம் போன்றவை அவசியம் - அவை தரும் உடல்ரீதியான பாதுகாப்பு நிச்சயம் வேண்டும். ஆனால் மனோரீதியான, உள்முகமானப் பாதுகாப்பு என்று ஏதாவது இருக்கிறதா? நாம் ஒவ்வொரு வரும் தனிப்பட்ட நபர் என்ற நம் கருத்தின் காரணமாக இந்த குழப்பம் தோன்றுகிறதா? மானிட இனத்தின் பொதுவான மூளையே நமது மூளையாகவும் இருக்கிறது என்ற விஷயத்தை நாம் எப்பொழுதும் ஆராய்ந்ததில்லை. 'நான்' 'நீ' என்ற வேறுபாடுகளும், மற்ற கூட்டத்திற்கு எதிரான நம் சொந்தக் கூட்டம் என்ற முறைகளும், தான் தனிப்பட்ட நபர் என்ற கருத்தும், பாதுகாப்பை வேண்டும் விருப்பத்தின் காரணமாகத் தோன்றி யிருக்கலாம்.

ஜே. கிருஷ்ணமூர்த்தியும் நெருக்கடியில் தவிக்கும் உலகமும், Pg. 17

# கவனமும், அமைதியும் உள்ளபோது கற்றுக்கொள்கிறீர்கள்

மாணவன் : நம்மைப்பற்றி நாம் எவ்வாறு தெரிந்து கொள்வது?

கிருஷ்ணமூர்த்தி : இது மிக நல்ல கேள்வி. நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். நீங்கள் என்ன என்பதை நீங்கள் எவ்வாறு அறியப் போகிறீர்கள்? என் கேள்வி உனக்கு புரிகிறதா? முதல் தடவையாக கண்ணாடியில் உங்களைப் பார்க்கிறீர்கள். சில நாட்கள் கழித்து அல்லது சில வாரங்கள் கழித்து திரும்பவும் பார்த்து, "திரும்பவும் நான்தான் அது" என கூறுகிறீர்கள். சரிதானா? அதனால் தினசரி கண்ணாடியில் பார்ப்பதன் மூலம் உங்கள் முகத்தை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள். "அத நான்தான்" என்று கூறுகிறீர்கள். அதே போல் உங்களை கவனிப்பதன் மூலம், நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை இப்பொழுது அறியக்கூடுமா? உங்கள் சைகைகள், நீங்கள் நடக்கும் விதம், பேசும் விதம், உங்கள் நடத்தை எப்படி என்பதை உங்களால் ஆழ்ந்து கவனிக்க முடியுமா? நீங்கள் கடினமானவரா, கொடூரமானவரா, கரடுமுரடானவரா, பொறுமையானவரா என்பதை உங்களால் ஆழ்ந்து கவனிக்க முடியுமா? அப்படி கவனிக்கும் போது உங்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நீங்கள் என்ன உணர்கிறீர்கள் என்னும் கண்ணாடி யில் உங்களைக் கவனிப்பதன் மூலம் உங்களை நீங்கள் அறிகிறீர்கள். உணர்வது, செய்வது, நினைப்பது – அதுதான் கண்ணாடி, அந்தக் கண்ணாடியில் உங்களை கவனிக்க ஆரம்பிக்கிறீர்கள். கண்ணாடி கூறுகிறது இதுதான் உண்மை என்று. ஆனால் அந்த உண்மை உங்களுக்கு பிடிக்கவில்லை. அதை மாற்ற நீங்கள் விரும்புகிறீர்கள். அதனால் அதை கோணலாக்குகிறீர்கள். பின் இருப்பதை இருப்பதுபோல நீங்கள் காண்பதில்லை.

அன்றொரு நாள் நான் கூறியபடி, கவனமும் அமைதியும் இருக்கும்போது நீங்கள் கற்றுக் கொள்கிறீர்கள். உங்களிடம் அமைதி இருக்கையில், நீங்கள் முழு கவனத்தையும் கொடுக்கையில் கற்றல் உள்ளது. அந்த நிலையில் கற்கத் துவங்குகிறீர்கள். இப்பொழுது அமைதியாக அமருங்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்பதற்காக அல்ல. அதுதான் கற்பதற்கு வழி என்பதால். எவ்வித சலனமும் இன்றி அமைதியாக அமருங்கள். உங்கள் உடலில் மட்டும் இன்றி உங்கள் மனதிலும் சலனம் இன்றி அமைதியாக இருங்கள். மிகவும் அசைவற்று இருங்கள். பின் அந்த சலனமற்ற நிலையில் கவனியுங்கள். இந்த கட்டிடத்திற்கு வெளியே உள்ள ஓசைகள், அந்த சேவல் கூவுவதை, அந்த பறவைகளை, யாரோ ஒருவர் இருமுவதை, யாரோ ஒருவர் எழுந்து செல்வதை, கவனியுங்கள். முதலில் உங்களுக்கு வெளியே உள்ளவற்றிற்கு செவிகொடுங்கள். பின் உங்கள் மனதிற்குள் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை கேளுங்கள். நீங்கள் மிக மிக கவனத்துடன் கேட்பீர்களானால் - அந்த நிசப்தத்தில் - வெளியில் உள்ள ஓசையும் உள்ளே உள்ள ஓசையும் ஒன்றுதான் என்பதைக் காண்பீர்கள்.

வாழ்விற்கு உதவும் 'அறிவு' என்ற புத்தகத்திலிருந்து

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 (Old 64, 65) Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by G. Rajeev on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*